**காலி மாநகர சபை - 2023**

**----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காலி மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேசிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, காலி மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்கியிருந்த ரூபா 3,947,236 தொகைக்கான களஞ்சிய இருப்பு, ரூபா 3,473,201 இற்கான மீதியான டீசல் இருப்பு ரூபா 110,300,273 இற்கான ஓய்வூதியப் பங்களிப்பு கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என மற்றும் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையை அமைந்துள்ள முறை இனங்காண்பதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய வருமானக் கடன்பட்டோர் ரூபா 6,270,246 தொகை, பெற வேண்டிய நிர்மாண வேலைக் கடன்பட்டோர் ரூபா 11,663,725 தொகை மற்றும் பெற வேண்டிய சம்பளமற்ற விடுமுறை ரூபா 642,747 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நீதிமன்றத் தண்டப்பணம் என வருமானம் கிடைக்கும் போது வகைப்படுத்தலொன்று கிடைக்கப்படாமையால் இனங்காண முடியாது என மற்றும் ஏனையவைகள் எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (இ) | மென்பொருளின் பெறுமதி ரூபா 455,000 தொகை மற்றும் ரூபா 220,000,000 இற்கான கிரயமொன்று மேற்கொண்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்த கவ்ஷிமா சேதனப் பசளை இயந்திரத்தின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | மென்பொருளின் பெறுமதி எதிர் காலத்தில் சரி செய்து சரியாக கணக்கீடு செய்யப்படும் என மற்றும் கவ்ஷிமா இயந்திரத்தின் கிரயம் பதிவு செய்யப்பட்டு கிடைக்கப்பட்டுள்ளதென | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | சான்றொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை என. | |
| (ஈ) | குப்பை சேகரித்தல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 1,971,918 தொகை, பெற வேண்டிய குப்பை வரி வருமானம் ரூபா 356,401 தொகை மற்றும் பெற வேண்டிய தண்டப் பணம் ரூபா 34,826 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (உ) | 14 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 3,027,305 தொகை மற்றும் நிலையான வைப்புக்கள் தொடர்பாக பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 182,057 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் வாடகைத் தொகை மற்றும் தண்டப் பணம் ரூபா 10,103,230 தொகை மிகையாகவும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 214,662 தொகை மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 24,748,816 தொகை மற்றும் கிடைத்த வட்டி ரூபா 108,819 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதெனவும் மற்றும் எதிர் காலத்தில் சரி செய்யப்படும் எனவும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான ரூபா 169,078 தொகை பெறுமதியான மருந்து வகை இருப்பு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டமையால் அந்தத் தொகையினால் செலவுகள் மற்றும் திரண்ட நிதியம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்ளப்படுகின்றேன் என. | - மேற்படி - |
| (ஏ) | பொருட் பதிவேட்டுத் தன்மையுடைய பண்டங்களின் பெறுமதி ரூபா 319,899 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஏல விற்பனை செய்யப்பட்ட ரூபா 863,358 தொகை கிரயத்திற்கான உபகரணங்களை இனங்கண்டு நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருட் பதிவேட்டு இருப்பு மற்றும் உபகரணங்களை அகற்றி சொத்துக்கள் பதிவேடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | - மேற்படி - |
| (ஐ) | மீண்டுவரும் செலவுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,666,392 தொகை குறைவாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | கடந்த ஆண்டு தொடர்பாக அறவீடு செய்யப்பட்டிருந்த நிலுவை வீதவரி ரூபா 505,604 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தகவல்கள் பின்னைய ஆண்டிற்காக கணக்கீடு செய்ய முடியாது என. | -மேற்படி- |
| (ஓ) | 2021 ஆண்டின் நிலுவை வருமானம் பெறுவனவுகள் 2022 ஆண்டின் வருமானம் என கணக்கீடு செய்தலை நடைமுறை ஆண்டின் போது சரி செய்வதற்கு தேவைப்படாமையால் ரூபா 1,826,256 தொகை அனுமதிப்பத்திரக் கட்டண கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு வைத்தல் மற்றும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தமையால் அந்த கணக்குகள் சமமான பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | -மேற்படி- |
| (ஔ) | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ரூபா 374,250 இற்கான பெற வேண்டிய கைத்தொழில் வரி அங்கீகாரமின்றி பதிவழித்தலை சரி செய்யாமையால் பெற வேண்டிய கைத்தொழில் வரி அந்த தொகையினை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தண்டமாகக் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பத்தில் சிட்டையிடல் மேற்கொள்ளப்படும் என. | -மேற்படி- |
| (க) | உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த கடன் தொகையிலிருந்து செலுத்த வேண்டிய ரூபா 3,638,999 இற்கான தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கடனை செலுத்துவதற்காக சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என. | -மேற்படி- |
| (ங) | கடந்த ஆண்டின் போது சபைக்கு சொந்தமான கூட்டுக்கிரயம் ரூபா 4,584,070 தொகை பெறுமதியான 18 வாகனங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிலையான சொத்துக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வாகனங்களை அகற்றி பதிவேடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ச) | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ஒன்றிற்கு ஒன்று சமப்பட வேண்டிய வீட்டு வாடகை காசுக் கணக்கு மற்றும் வீட்டு வாடகை வைப்புக் கணக்கு மீதிகள் இடையே ரூபா 2,753,908 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | 2024 இறுதிக் கணக்குகள் மூலம் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 24 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் உறுதிப்படுத்தல்களுடன் இணக்கஞ் செய்யும் போது கூட்டுத்தொகையில் ரூபா 49,798,380 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கு மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | தொங்கல் கணக்கு மீதியை சரி செய்வதற்கு நடவடிக்க எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 542,948,960 தொகைக்கான 11 கணக்கு விடயங்களின் தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| | (i) | நிதிப் பிரமாணம் 104 | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களுக்கு எதிராக | ஆரம்ப விசாரணை நிறைவேற்றுவதற்கு | நிதிப் பிரமாணங்களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 316 | சபைக்கு சொந்தமான 13243 அடியிதழ் புத்தகங்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. | உரிய முறையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | -மேற்படி- |
| (ஆ) | தென் மாகாண பிரதான செயலாளரின் 2018 மே 22 திகதிய மற்றும் SS 03/12/05 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான பெறுமதி குறிப்பிடப்படாத 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | அப்புறப்படுத்தல் அலுவல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 திகதிய இலக்கம் 31/2018 கொண்ட வாகன முகாமைத்துவ சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான அகற்றப்பட்ட 08 வாகனங்கள் தொடர்பாக பதிவு செய்தலை இரத்துச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான ஆவணங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 111,864,059 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 66,596,685 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 192,088 தொகை பெறுமதியான 13 காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் 07 வருடங்களும் 26 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலங் கடந்திருந்த போதிலும் அந்த காசோலைகளை அறவீடு செய்தல் தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை குழுவின் தீர்மானம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்படும் என. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1993 நவம்பர் 13 திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபை தலைவரின் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 15 இற்கு இணங்க திறக்கப்பட்டிருந்த | திட்டத்தினை அங்கீகரிப்பதற்காக அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | திட்டமிடல் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

நிலையான வைப்புக் கணக்கில் ரூபா 18,000,000 மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்த பணத்தை பயன்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 172,500,000 | 108,277,586 | 118,312,162 | 220,670,073 | 112,500,000 | 113,645,131 | 88,558,593 | 230,704,649 |
| வாடகை | 136,001,000 | 117,417,075 | 88,117,584 | 71,263,943 | 117,882,000 | 58,438,908 | 61,184,509 | 41,964,452 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 28,529,000 | 29,916,328 | 28,090,072 | 9,496,847 | 33,958,000 | 26,842,014 | 24,761,694 | 7,670,591 |
| ஏனைய வருமானங்கள் | 87,275,000 | 121,817,764 | 125,705,498 | 1,440,468 | 59,596,000 | 131,758,201 | 129,375,318 | 5,328,202 |
| | 424,305,000 | 377,428,753 | 360,225,316 | 302,871,331 | 320,936,000 | 330,684,254 | 303,885,114 | 285,667,894 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருட ஆரம்ப தினத்தில் மொத்த நிலுவை வருமானம் ரூபா 285,667,894 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 302,871,331 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 26653 வீதவரி அலகுகளில் இருந்து நிலுவை வீதவரி ரூபா 196,088,134 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 154,041,757 தொகைக்கான நிலுவை அலகுகள் 7273 இற்காக மாத்திரம் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. நிலுவை வீதவரி மீதியில் 5 வருடங்களை மிகைத்துள்ள 13552 அலகுகளில் இருந்து ரூபா 133,745,845 இற்கான மீதியொன்றும் மற்றும் 6812 அலகுகளிலிருந்து ரூபா 44,253,279 இற்கான மீதியொன்றும் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் நிலுவையாக காணப்பட்டது. அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 5,000 இற்கு மிகையான நிலுவை வீதவரி மீதிகளுக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் வேலைத் திட்டம் ரூபா 25,000 இற்கு மிகையான ஆதனங்களின் நிலுவைக்காக நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என. | -மேற்படி- |
| (இ) | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் காலி சர்வதேச கிரிகெட் மைதானம் 2013 ஆண்டின் மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டின் போதும் வருமானம் அறவிடப்பட்டிருந்தது. | தரையின் அளவை தீர்மானித்த பின்னர் விரைவாக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படும் என. | உரிய வருமானங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | DSI நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த கட்டிடத்துடனான காணி 2022 ஆண்டின் போது ரூபா 6,100,000 இற்கான வருடாந்த வாடகைத் தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 ஆண்டிலும் ரூபா 150 தொகைக்கான மாதாந்த வாடகைத் தொகையொன்றே அறவிடப்பட்டிருந்தது. | ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி 2022 ஆண்டு முதல் வரி அறவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | உடன்படிக்கைகளை புதுப்படுத்தல் விரைவுபடுத்த வேண்டும். |
| (உ) | சியம்பலாகஹவத்த 10 நகர வீடுகள் தொடர்பாக ரூபா 800,610 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், 07 வருடங்களுக்கும் 17 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் குறிப்பிட்ட தரப்பிரனரினால் எதுவித வாடகைத் தொகையும் சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக வருமானப் பரிசோதகருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தர்மபால பூங்காவில் A சிற்றுண்டிச் சாலை 2022 ஆண்டின் போது மாதாந்த வாடகை ரூபா 200,000 இற்கான வாடகைத் தொகைக்கு இரண்டு வருடங்களுக்காக வாடகைக்கு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மதிப்பீட்டு பெறுமதி இரத்தாகும் வரை டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் சபை ரூபா 4,800,000 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருக்காமையால் கூறுவிலைகள் அழைத்தல் தாமதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமனா சொத்துக்களில் இருந்து வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | நகர புதிய மீன் வர்த்தக கட்டிடத் தொகுதியில் 30 கடையறைகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், வாடகைக்கு கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் சபை ரூபா 7,004,400 இற்கான வருமானமொன்றை இழந்திருந்தது. | எதிர்காலத்தில் டென்டர் பண்ணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து விரைவாக வருமானம் உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 26,437,920 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 242 கடையறைகளில் இருந்து ரூபா 18,423,763 இற்கான மீதியொன்று 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 253(1) இற்கு இணங்க இந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை செலுத்தாக கடையறைகள் தொடர்பாக அட்டவணை 9 வழங்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 401 நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 13,904,589 இற்கான கட்டணம் ஒன்று அறவீடு செய்திருக்கவில்லை. | பணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை அறிவித்தல் பலகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் முத்திரைக் கட்டணமாக ரூபா 163,855,041 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | ரூபா 139,128,124 தொகை மானியமாக காணப்படுவதுடன் ரூபா 24,726,920 இற்கான மிகை பற்றாக்குறை ஒதுக்கத்தின் மீது ஏற்பட்ட தொகையாகும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 220 மில்லியன் கிரயத்தையுடைய சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்தில் காணப்படும் 7 சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இங்கு 6000 மெ.டொ. குப்பைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உரத்தின் எண்ணிக்கை 5 மெ.டொ. அளவான குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளின் காரணமாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமையொன்று காணப்படுகின்றது என. | எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 09 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 4,562,500 இற்கான கட்டணம் அறவீடு செய்து அணவல் அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்டரீதியாக்கிக் கொள்ளும்படி அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 994,900 தொகை பெறுமதியான 11 மடிகனிணிகள் மற்றும் ரூபா 395,991 தொகை பெறுமதியான 09 டெப்கள் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை முகாமைத்துவப்படுத்த வேண்டும். |
| (இ) | 2012 ஆண்டு முதல் நகர அதிகார சபையிலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 759,190 இற்கான வாடகை வருமானமொன்று 11 வருடங்களாக அறவீடு செய்திருக்கவில்லை. | சபைக்கு விரைவாக செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது என. | சபைக்குச் சொந்தமான வருமானங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஈ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களில் இருந்து அனுமதிப்பத்திக் கட்டணமாக ரூபா 1,786,500 தொகை மற்றும் பரிசோதனை கட்டணமாக ரூபா 1,191,000 தொகை சபை அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெளிக்களப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கள் மேற்கொள்ள வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேசத்தில் வாடகை மற்றும் அனுமதிப்பத்திரம் செலுத்தும் 236 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் குப்பைக் கட்டணம் ரூபா 11,636,250 தொகை அறவீடு செய்திருந்த போதிலும் ஏனைய 2931 நிறுவனங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என. | வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 கட்டிடங்களில் 47 வாகனத் தரிப்பிடங்களுக்கான நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்காமையால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வர்த்தமானியின் அ4.1 பந்தியின் கீழ் ரூபா 23,500,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை அல்லது தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படவில்லை என. | வர்த்தமானிக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 242) பிரிவு 188(1) ஏற்பாடுகளுக்கு இணங்காத முறையில் 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்காக காணிகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் இருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 38,448,462 தொகை அறவீடு செய்வதற்காக 2023 ஆண்டின் போது ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 1,153,452 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சட்டரீதியான ஏற்பாடுகளின் கீழ் இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமையால் அது சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டமொன்றென சுட்டிக்காட்ட முடியாது என. | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க முத்திரைக் கட்டணத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளல் சபை நிதியத்திற்கு ஏற்படுத்தும் நட்டமொன்றாகும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 19 வாகனங்கள் 06 மாதங்கள் முதல் 10 ஆண்டுகள் வரை காலம் முதல் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் | திருத்தவேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் உரிய முறையில் பராமரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | | மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 108 வாகனங்களின் பெறுமதியை இனங்காண முடியாதிருந்ததுடன் அவற்றில் 08 டேலர் வண்டிகள் இனங்காண முடியாதவாறு உக்கிய நிலையில் காணப்பட்டதுடன் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | பெறுமதியை இனங்காணல் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 23 காணிப் பகுதிகள் சபையின் அங்கீகாரமின்றி தனியார் தரப்பினரினால் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. | அந்த காணிப் பகுதிகளை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 84 காணிகள் தொடர்பாக நில வரைபடங்கள் தயாரிப்பதற்கு மற்றும் 99 காணிகள் தொடர்பாக காணி உறுதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களும் சபைக்கு உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காலி சமனல விளையாட்டுத் திடலின் உத்தேச நவீன கழிவறை முறைமை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக உரிய முறையில் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையால் அமைச்சிலிருந்து மீளளிப்பு செய்யக் கூடியதாக இருந்த ரூபா 1,235,760 தொகையினை மா நகர சபை நிதியம் இழந்திருந்தது. | பதிலளிக்கப்படவில்லை என. | உரிய முறையில் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஹீன் எல கெகுனகெவத்த பாதையை தார் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலையின் நிர்மாணிக்கப்பட்ட அளவினை உரிய முறையில் கணித்திருக்காமையால் ரூபா 97,862 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. | மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | தடல்ல தகனகூடத்தின் 3 ஆவது அறையில் திருத்த வேலை | வேலை விபரங்கள் தெளிவாக | சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளும் நிர்மாணவேலை உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,200,000 இற்கான முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்படாமையால் என. | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்மீதி ரூபா 81,332,218 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த, ஓய்வுபெற்றிருந்த, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையை விட்டுச் சென்றிருந்த, இறந்த, வெளிநாடு சென்றிருந்த மற்றும் ஏனைய 39 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,296,775 இற்கான கடன்மீதி அறவிடப்படாமல் நிலுவையாக காணப்பட்டது. | கடன் மீதியை அறவீடு செய்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 183(1) பிரிவின் பிரகாரம் சபையின் ஊழயர்களுக்காக நிறுவப்பட்டிருந்த ஊழியர் சேமலாப அங்கத்துவ நிதியத்திற்காக 1999 ஆண்டிற்கு முன்னர் பங்களிப்பு செய்த நகர சபை ஊழியர்களுக்காக சேகரமாகிய தொகை 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 16,773,004 இற்கான தொகை உரிய ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யாமல் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விடயங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலிற்கு இணங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடு ஒன்றென்ற வகையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. அதன் 17 குறிக்கோள்கள் 169 இலக்குகள் மற்றும் 244 சுட்டிகள் அடங்குகின்றன. இந்த குறிக்கோளை நோக்கி நெருங்கும் போது 2030 நிகழ்ச்சி நிரலிற்கு இணங்க தனது விடயப் பரப்பின் படி நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் காலி மா நகர சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபடும் என. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |